செய்தி வெளியீடு எண்: 655 நாள்:28.09.2019

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (28.9.2019) சேலம் மாவட்டம் சங்ககிரி சட்டமன்றத் தொகுதியில், முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் முகாமினை துவக்கி வைத்து ஆற்றிய உரை**

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இன்றைய தினம் சேலம் மாவட்டத்திலிருக்கின்ற சட்டமன்ற தொகுதிகளுக்கு நானே நேரில் சென்று, மக்களை சந்தித்து மனுக்களைப் பெற்று, பரிசீலித்து அந்த மனுக்களுக்கு தீர்வு காண்பதற்காக இந்த சிறப்பு மக்கள் குறை தீர்க்கும் திட்டத்தை துவக்கியிருக்கின்றோம். இங்கு பெறப்படும் மனுக்களுக்கு விரைவாக தீர்வு காணப்படும். குறிப்பாக, முதியோர் உதவித் தொகை வழங்கிட வேண்டி அதிக மனுக்கள் அளிக்கப்படுகிறது. தமிழ்நாடு முழுவதும் உழைக்கும் திறனற்ற, வயது முதிர்ந்த முதியோர்களுக்கு அரசு உதவி செய்யவேண்டுமென்ற அடிப்படையில் சுமார் 5 லட்சம் முதியோர்களுக்கு உதவித் தொகை அளிக்க வேண்டுமென்று முடிவெடுத்து, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் சுமார் 2,000 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு மாதா மாதம் ரூ.1,000 வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதோடு நீண்ட நாட்களாக தாங்கள் வசித்து வீட்டிற்கு பட்டா வாங்காமல் இருக்கின்றவர்கள் பட்டா வேண்டுமென்று விண்ணப்பித்திருக்கின்றார்கள். அதனையும் அதிகாரிகள் ஆய்வு செய்து தகுதியுள்ளவர்களுக்கு பட்டா வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதேபோல், நிலம், வீடு வாங்கியுள்ளவர்கள் பட்டா மாறுதல் செய்வதற்கு மனு கொடுத்தால், அந்த மனுவை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் ஆய்வு செய்து பட்டா மாறுதல் செய்து கொடுக்கப்படும். மக்கள் தங்களது இதர பிரச்சினைகள்

குறித்து மனுக்களை கொடுத்தால், அரசு அதை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்த பகுதியைச் சேர்ந்த மக்கள் தங்கள் பகுதிக்கு சாலை வசதி, குடிநீர் வசதி, தெரு விளக்கு வசதி, போக்குவரத்து வசதி, மருத்துவமனை, பள்ளி ஆகியவை வேண்டுமென்று பல்வேறு மனுக்களை அளித்துள்ளார்கள் . அம்மனுக்களை ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் அனைத்து தொகுதிகளிலும் முதலமைச்சரின் சிறப்பு குறைதீர்க்கும் திட்டத்தை துவக்கப்பட்டு, ஆங்காங்கே மாவட்ட அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நேரடியாகச் சென்று மனுக்களை பெற்று வருகிறார்கள். அம்மனுக்களை சம்மந்தப்பட்ட அலுவலர்கள் பரிசீலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்வார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை எடப்பாடியில் இந்தத் திட்டத்தை துவக்கி, பிறகு கெங்கவள்ளி, ஆத்தூர், ஏற்காடு, வீரபாண்டி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளின் மக்களிடத்தில் மனுக்களை பெற்றிருக்கின்றோம். நாளைய தினம் மேட்டூர், ஓமலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மக்களிடமிருந்து மனுக்களை பெற்று தீர்வு காணப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 8 ஆண்டுகளில் அம்மாவின் அரசால், சங்ககிரி சட்டமன்றத் தொகுதிக்கு அளிக்கப்பட்ட பல்வேறு திட்டங்களை நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்றைக்கு இந்த ஆட்சியில் எந்தத் திட்டமும் நிறைவேற்றப்படவில்லை என்று குற்றச்சாட்டு கூறுகின்றார். அதுமட்டுமல்ல, பல்வேறு எதிர்க்கட்சித் தலைவர்களும் குற்றச்சாட்டை சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். அதற்கு பதில் சொல்லவேண்டிய கடமையில் நாங்கள் இருக்கின்றோம்.

இன்றைக்கு சங்ககுரி சட்டமன்றத் தொகுதியில் மட்டும் கூட்டுறவுத் துறையின் சார்பாக 220 நபர்களுக்கு பயிர்க்கடன் உதவிகளும், 41 நபர்களுக்கு மத்திய காலக் கடனுதவிகளும், 97 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவிகளும், 358 பயனாளிகளுக்கு ரூபாய் 2 கோடி மதிப்பிலான நலத்திட்டங்களை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வழங்கி இருக்கின்றோம்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் 60 நபர்களுக்கு பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ் வீடுகளும், மாண்புமிகு முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் வீடு நிதியுதவி என 100 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 96 லட்சம் மதிப்பீட்லான கடனுதவிகளை இன்று வழங்கி இருக்கின்றோம்.

மகளிர் திட்டம் சார்பில் 14 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு வங்கிக்கடன் உதவி மற்றும் 59 நபர்களுக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தின் கீழ் மானியம் என மொத்தம் 73 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 1 லட்சத்து 5 ஆயிரம் மதிப்பிலான கடனுதவி வழங்கப்படுகிறது.

தோட்டக்கலைத் துறையின் சார்பாக 16 நபர்களுக்கு பாரதப் பிரதமரின் நுண்ணுயிர் பாசனத் திட்டத்தின் கீழ் மானியமும், 4 நபர்களுக்கு தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சாதாரண நடவு மானியமும், 6 நபர்களுக்கு தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ் மானியமும், என மொத்தம் 26 பயனாளிகளுக்கு ரூபாய் 13 லட்சத்து 51 ஆயிரம் மதிப்பிலான நிதியுதவியும், வேளாண் பொறியாளர் துறை சார்பில் 2 நபர்களுக்கு வேளாண் இயந்திரமாக்கல் உப இயக்கத் திட்டத்தின் கீழ் டிராக்டர் மானியமும், என மொத்தம் 2 பயனாளிகளுக்கு ரூபாய் 7 லட்சத்து 2 ஆயிரம் மதிப்பிலான நிதியுதவி வழங்கப்படுகிறது.

வேளாண்மைத் துறையின் சார்பில், 26 நபர்களுக்கு வேளாண் தொழில்நுட்ப வேளாண்மை முகமைத் திட்டத்தின் கீழ் சோலார் விளக்கு பொறிகளும் என மொத்தம் 26 பயனாளிகளுக்கு நிதியுதவியும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில், 7 நபர்களுக்கு விலையில்லா தையல் இயந்திரமும் வழங்கப்படுகிறது.

ஆக மொத்தம் இன்று நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சியின் வாயிலாக 592 பயனாளிகளுக்கு ரூபாய் 5 கோடியே 4 லட்சம் மதிப்பிலான பல்வேறு திட்ட உதவிகள் வழங்குகின்ற அரசு எங்களுடைய அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் கடந்த 8 ஆண்டுகளில் சுமார் ரூபாய் 210 கோடி மதிப்பீட்டில் இந்தத் தொகுதியில் மட்டும் 35,710 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வருவாய்த் துறையில் ரூபாய் 83.50 கோடி மதிப்பீட்டில் 8,195 பயனாளிகளுக்கு ரூபாய் 85 கோடியே 27 லட்சம் மதிப்பிலான பல்வேறு உதவித் தொகைகள்

வழங்கப்பட்டுள்ளன. விலையில்லா வீட்டுமனை பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் 5,825 பயனாளிகளுக்கு ரூபாய் 15.61 கோடி மதிப்பீட்டில் வீட்டு மனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

பொது சுகாதார மற்றும் நோய் தடுப்பு மருத்துத் துறையில் சுமார் ரூபாய் 83 லட்சம் மதிப்பீட்டில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. வடுகபட்டி மற்றும் மகுடஞ்சாவடி ஆகிய இடங்களில் 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.1.56 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. ஆகவே, இன்றைக்கு தரமான மருத்துவ சிகிச்சையை கிராமப்புற மக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக 30 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவமனையை கொடுத்து, புதிய மருத்துவர்கள் கூடுதலாக நியமிக்கப்பட்டு அங்கே வருகின்றவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்க வேண்டும் என்பதற்காக அரசு மேம்படுத்தப்பட்ட மருத்துவமனையையும் நாங்கள் இந்தத் தொகுதியில் துவக்கியிருக்கின்றோம் என்பதைச் சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் மூலம் 20,233 பயனாளிகளுக்கு ரூபாய் 65 கோடியே 7 இலட்சம் மகப்பேறு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்திய வரலாற்றிலேயே பிறக்கின்ற குழந்தைகளுக்கு உடனே அரசு நலத் திட்ட உதவிகள் வழங்குகின்ற ஒரே மாநிலம் தமிழ்நாடு தான். அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். அதன் மூலமாக 634 பச்சிளம் குழந்தைகளுக்கு 16 வகையானபொருட்களை கொண்ட பரிசுப் பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது.

அம்மா தாய்சேய் நல ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கும் திட்டத்தின் கீழ் 969 தாய்மார்களுக்கு ரூ.20 இலட்சம் மதிப்பீட்டிலான ஊட்டச்சத்து பெட்டகங்கள் வழங்கப்பட்டுள்ளன. அம்மாவினுடைய அரசால் இன்றைக்கு ரூபாய் 3.15 கோடி மதிப்பீட்டில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு உள்ளிட்ட பல்வேறு கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

தமிழகத்தில் தான் நெடுஞ்சாலைத் துறை சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக இந்த தொகுதியில் கடந்த 8 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 187 கி.மீ சாலைகள் அமைப்பதற்கு என சுமார் ரூபாய் 100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் மட்டும் சுமார் 73 கி.மீ. சாலைகள் சுமார் ரூபாய் 69 கோடி மதிப்பீட்டில் அகலப்படுத்தப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளன.

தாரமங்கலம் பேரூராட்சி பகுதியில் புறவழிச்சாலை அமைக்கப்படும் என அறிவித்து, நிதி ஒதுக்கி, பணி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. திட்டத்தை சொன்னோம், செய்தோம், திறந்துவைத்தோம். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எந்தத் திட்டமும் நிறைவேற்றப்படவில்லை என்று சொல்கிறார். தாரமங்கலம் பேரூராட்சி பகுதியில் புறவழிச்சாலை அமைத்தது எங்கள் அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக சுமார் ரூபாய் 24 கோடி செலவழிக்கப்பட்டு சுமார் 3.110 கி.மீ. சாலை அமைக்கப்பட்டிருக்கிறது.

வேளாண்மைத் துறையில் சுமார் ரூபாய் 17.50 கோடி மதிப்பீட்டில் 87,341 விவசாயிகளுக்கு விவசாய இயந்திரங்கள்ள், கருவிகள், விதைகள், சொட்டு நீர் பாசன மானியம், இடுபொருள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் தொகுதியில் மட்டும் வேளாண் பெருமக்கள் செழிக்க வேண்டுமென்பதற்காக சுமார் ரூபாய் 17.56 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறையின் சார்பில் இந்தப் பகுதியில் மட்டும் சுமார் ரூபாய் 28.9 இலட்சம் மதிப்பீட்டில் 11,982 விவசாயிகள் பயன்பெறும் வகையில் சொட்டு நீர் பாசன மானியம், காய்கறி விதைகள், பழச்செடிகள், தேனீ வளர்ப்பு உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. சங்ககிரி பகுதியில் 1000 அடிக்கு மேல் bore போட்டால் தான் தண்ணீர் கிடைக்கும். எனவே, சொட்டுநீர் பாசனக் கருவிகளை பொருத்தவேண்டுமென்று விவசாயிகள் வைத்த கோரிக்கையின் அடிப்படையில், விவசாயிகள் 1 ஏக்கர் நிலம் வைத்திருந்தால் சொட்டுநீர் பாசனத்திற்கு முழு மானியம் தருகிறோம். அதற்கு மேல் எத்தனை ஏக்கர் நிலம் வைத்திருந்தாலும், அந்த விவசாயிகள் சொட்டுநீர் பாசன கருவிகள் வேண்டுமென்று விண்ணப்பித்தால், அவர்களுக்கு 75 தசவீத மானியத்தில் சொட்டுநீர் பாசனக் கருவிகளைக் கொடுத்து, விவசாயிகளுக்கு அனைத்து உதவிகளையும் அம்மாவின் அரசு செய்து வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண் பொறியியல் துறையின் சார்பாக 2,144 விவசாயிகளுக்கு சுமார் ரூபாய் 2.25 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

கடந்த 8 ஆண்டுகளில் சங்ககிரி தொகுதியில் பல்வேறு குடிநீர் வசதிகளைச் செய்து கொடுத்திருக்கின்றோம். 158 ஊரக குடியிருப்புகளுக்கு சுமார் ரூ.12 கோடி மதிப்பீட்டில் தனி மின்விசை குடிநீர் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. சங்ககிரி மற்றும் மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தில் 59 பள்ளிகள், 35 அங்கன்வாடி மையங்கள், சுமார் ரூபாய் 1.32 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

குடிநீர் ஆதாரங்களை செறிவூட்டுவதற்காக 17 புனரமைப்புத் திட்டப் பணிகள் சுமார் ரூபாய் 69 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆக மொத்தம் ரூபாய் 14 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கூட்டுக் குடிநீர் திட்டத்தில் எடப்பாடி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி ஒன்றியத்தைச் சார்ந்த 327 ஊரக குடியிருப்புகளுக்கு காவிரி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுக்கப்பட்டு பாதுகாப்பான தண்ணீர் வழங்கப்படும் என அம்மா அவர்கள் அறிவித்து, அடிக்கல் நாட்டினார்கள். புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுதே சுமார் ரூபாய் 46.45 கோடி மதிப்பீட்டில் இந்தக் கூட்டுக் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டு மூன்று ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட தண்ணீரை வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு. சேலம் மாவட்டம் சங்ககிரி பேரூராட்சிக்கு கூட்டுக் குடிநீர் திட்டம் அடிக்கல் நாட்டப்பட்டு, பணி நடைபெற்று வருகின்றது. இப்பகுதி மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க நடவடிக்கை எடுத்த அரசு எங்களுடைய அரசு.

இவ்வளவு புள்ளிவிவரங்கள் சொல்வதற்குக் காரணம், எங்கு பார்த்தாலும், எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலின் அவர்கள் இந்த அரசைப் பற்றி விமர்சனம் செய்து கொண்டிருக்கின்றார். எனவே, இந்த அரசு இந்த சங்ககிரி தொகுதியில் மட்டும்

என்னென்ன பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன, என்னென்ன பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, என்னென்ன பணிகள் நிறைவேற்றப்படவுள்ளன என்பதை பொதுமக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இதை நான் உங்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.

கூட்டுறவுத் துறையில், சுமார் 48,476 விவசாயப் பெருமக்களுக்கு சுமார் ரூபாய் 253 கோடி பயிர்க்கடன் உதவியும், 2,428 விவசாயப் பெருங்குடி மக்களுக்கு சுமார் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் மத்திய காலக் கடனுதவியும், 4 இலட்சத்து 37 ஆயிரத்து 528 விவசாயப் பெருமக்கள் ரூபாய் 1424.95 கோடி மதிப்பீட்டில் நகைக் கடனும் வழங்கப்பட்டுள்ளது. 552 மாற்றுத் திறனாளிகளுக்கு சுமார் ரூபாய் 2.53 கோடி மதிப்பிலான கடன் வழங்கப்பட்டுள்ளது. 1,226 மகளிருக்கு சுமார் ரூபாய் 32.5 கோடி மதிப்பீட்டில் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. 9,613 நபர்களுக்கு சுமார் ரூபாய் 31.41 கோடி மதிப்பீட்டில் இதர கடனுதவிகளும் வழங்கப்பட்டுள்ளது. ஆக, கடந்த 8 ஆண்டுகளில் சங்ககிரி சட்டமன்றத் தொகுதியில் மட்டும் ரூ. 4 இலட்சத்து 99 ஆயிரத்து 855 நபர்களுக்கு ரூ.1,858.33 கோடி மதிப்பில் பல்வேறு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

விவசாயிகளின் உபதொழிலாக இருப்பது கால்நடை வளர்ப்பு. கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் 12,636 பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள், விலையில்லா அசல் இன கோழிகள், கால்நடை பாதுகாப்பு திட்டம், மாநில தீவன அபிவிருத்தித் திட்டம், மேச்சேரி இன ஆடு அபிவிருத்தித் திட்டம், சிறு பால்பண்ணை அமைக்கும் திட்டம் மற்றும் கால்நடை காப்பீடு திட்டம் போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் சுமார் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன. அதுபோல

12 கால்நடை மருந்தகங்களுக்கு ரூபபய் 1.17 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

ஏழை, எளிய மாணவர்கள் நல்ல கல்வி கற்கவேண்டும் என்பதற்காக அம்மாவினுடைய அரசு பல்வேறு திட்டங்களை தொடந்து நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகிறது. பள்ளிக் கல்வித் துறையின் சார்பில், 16,473 மாணவ./மாணவிபயர்களுக்கு, சுமார் ரூபாய் 18 கோடி மதிப்பீட்டில் விலையில்லா மடிக்கணினியை அளித்து விஞ்ஞான கல்வியை பெறுவதற்கு வசதி செய்து கொடுத்தது அம்மாவினுடைய அரசு. வல்லரசு நாடுகளில் கூட விலையில்லா மடிக்கணினி கொடுப்பது கிடையாது. முதலமைச்சர் அம்மா அவர்களால் தொடங்கப்பட்ட ஒளிமயமான எதிர்காலத்தை குழந்தைகளுக்கு உருவாக்குகின்ற இந்தத் திட்டத்தை எங்களுடைய அரசு தொடர்ந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

கிராமங்களில் வாழ்கின்ற மாணவ, மாணவியர்கள் பள்ளிக்கு அதிக தூரம் சென்று கல்வி கற்க வேண்டிய சூழ்நிலையை கண்ட இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குச் சிந்தனையோடு, பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டி கொடுத்தார்கள். கடந்த 8 ஆண்டுகளில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, நாட்டு மக்களுக்கு என்னென்ன திட்டங்களை வழங்கி வருகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அவ்வாறு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது தான் எந்த அரசு நல்ல அரசு, எந்த அரசு மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய அரசு என்பதை சிந்தித்துப் பார்த்து, இந்த அரசுக்கு நீங்கள் ஆதரவு

கொடுக்க வேண்டும் என்பதற்காகத் தான் இந்த புள்ளி விவரங்களை நான் தெரிவிக்க விரும்புகின்றேன். சங்ககிரி தொகுதியில் மட்டும் 13,438 மாணவ, மாணவியர்களுக்கு சுமார் ரூபாய் 4.75 கோடி மதிப்பீட்டில் மிதிவண்டிகள் வழங்கியிருக்கிறோம்.

அதேபோன்று, வருவாய் ஈட்டும் பெற்றோர்களை இழந்த மாணவர்களுக்கு உதவித் தொகை, இடை நிற்றலை தவிர்க்க சிறப்பு ஊக்கத் தொகை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு 20 ஆய்வக உதவியாளர் பணி நியமனம், விலையில்லா பேருந்து பயண அட்டை, இப்படி பல திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலமாக தற்போர் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011–ல் பதவியேற்கின்றபொழுது, கல்வி கற்போரின் எண்ணிக்கை, அதற்கு முன்னால் கல்வி கற்றோரின் எண்ணிக்கை, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பதவியேற்றதற்குப் பின்பு இன்றைக்கு கல்வி கற்போரின் எண்ணிக்கை என்னவென்று பார்க்க வேண்டும். அப்படி பிரித்துப் பார்க்கும்பொழுது, 2011–ஆம் ஆண்டு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பதவியேற்றதற்குப் பிறகு கல்வி கற்போரின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. அதற்குக் காரணம் அம்மா எடுத்த நடவடிக்கைகள் மற்றும் அதைத் தொடர்ந்து எங்களுடைய அரசு எடுத்த நடவடிக்கைகள் தான். ஆகவே, புதிய, புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தியதன் காரணமாக, இன்றைக்கு மாணவர்களுக்கு ஊக்கத் தொகை அளித்ததன் காரணமாக, பல்வேறு சலுகைகளை அளித்ததன் காரணமாக, கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை தமிழகத்தில் உயர்ந்திருக்கிறது. இன்றைக்கு தமிழகத்தில்தான் உயர்கல்வி படிக்கக்கூடியவர்களின் 49 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. ஆனால் 2005 முதல் 2011 வரையிலான திராவிட

முன்னேற்றக் கழக ஆட்சியில் உயர்கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கை 32 சதவீதம் தான். 2011–ல் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏற்படுத்திய கல்வி புரட்சியின் காரணமாக இன்றைக்கு படிப்படியாக உயர்ந்து இன்றைக்கு இந்தியாவிலேயே உயர்கல்வி படிப்பவர்களுடைய எண்ணிக்கையில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது. சங்ககிரி சட்டமன்றத் தொகுதியில் 4 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. எடப்பாடிக்கும், சங்ககிரிக்கும் இடையில் ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கொடுத்திருக்கின்றோம்.

அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் சார்பில் 6 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகளும், அனைவருக்கும் இடைநிலைக் கல்வி இயக்கத்தின் சார்பில் மகுடஞ்சாவடி, சங்ககிரி மற்றும் தாரமங்கலம் மாதிரிப் பள்ளிகள் மற்றும் மாணவ விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. ஆக மொத்தம் ரூபாய் 25 கோடியே 5 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு புதிய கட்டடங்கள், ஆய்வகங்கள், சுற்றுச்சுவர், மாதிரிப் பள்ளிகள் மற்றும் விடுதிகள் உள்ளிட்ட பல்வேறு கட்டங்கள் கட்டப்பட்டுள்ளன.

சமூக நலத்துறையின் மூலம் ஏழை எளிய பெண்களுக்கு தங்க நாணயத்துடன் திருமண உதவியினை மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து வழங்கி கொண்டிருக்கிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்கு சிந்தனையோடு ஏழை எளிய குடும்பத்திலே பிறந்த பெண் பிள்ளைகள் திருமண வயதை எட்டுகின்ற போது குடும்ப பொருளாதார சூழ்நிலை காரணமாக திருமணம் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை. அப்படிப்பட்ட பெண்கள் உரிய நேரத்திலே திருமணம் செய்ய வேண்டும் என்ற காரணத்திற்காக இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த திட்டத்தை

துவக்கி வைத்தார்கள். அதேபோல திருமண உதவித் திட்டத்தின் மூலமாக படித்த பெண்களுக்கு ரூ.50,000 மற்றும் ரூ.25,000 நிதியுதவியுடன் தங்க காசு நான்கு கிராம் என்பதை எட்டு கிராமாக உயர்த்தினார்கள். இன்றைக்கு ஒரு பவுன் 29,000 ரூபாய். அப்படி பார்க்கின்ற போது இந்த சங்ககிரி சட்டமன்ற தொகுதியிலே மட்டும் 2830 படித்த ஏழை பெண்களுக்கு திருமண உதவித் திட்டத்தின் மூலம் 16.32 கோடி ரூபாய் நிதியுதவியாகவும், தங்க நாணயமாக 1690 பவுன் கொடுத்திருக்கிறோம்.

புரட்சித் தலைவர் எம்ஜிஆர் சத்துணவு திட்டத்தின் கீழ் 10.50 கோடி ரூபாய் செலவில் 704 பள்ளிகளில் பயில்கின்ற 5 முதல் 14 வயது வரை உள்ள 1,71,706 மாணவ, மாணவியர்களுக்கு 11 வகையான சத்தான கலவை சாதங்கள் மற்றும் முட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஏழை எளிய கர்ப்பிணி தாய்மார்கள் நலமோடு குழந்தை பெற்று வளமோடு வாழ வேண்டும் என்பதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு திட்டம் கொண்டு வந்தார்கள். நேற்றைய தினம் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் சேலம் மாவட்டத்தில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு நடைபெற்றது. இதுவரை சங்ககிரி சட்டமன்ற தொகுதியில் 2,340 கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு நடத்தப்பட்டுள்ளது.

பொதுப்பணித் துறையின் மூலமாக பள்ளிக்கல்வித்துறை, கால்நடை பராமரிப்புத் துறை, வேளாண்மைத்துறை, தமிழ்வளர்ச்சித்துறை, போக்குவரத்துத் துறை, நீதித்துறை மற்றும் வருவாய் துறை ஆகிய துறைகளுக்கு ரூ.13.48 கோடி மதிப்பீட்டில் 21 புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

மேலும், 3 பள்ளிகளுக்கு ரூ.5.14 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. சங்ககிரி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு ரூ.2.54 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகின்றது.

எங்களுடைய அரசு மக்கள் நலன் காக்கின்ற அரசு. மக்கள் என்ன நினைக்கின்றார்களோ அதை நிறைவேற்றுகின்ற அரசு. அந்த எண்ணத்தின் அடிப்படையில் குடிமராமத்து திட்டத்தை அறிவித்து தமிழ்நாடு முழுவதும் அந்தப் பணி இன்றைக்கு சிறப்பாக நடைபெற்று கொண்டு இருக்கிறது.

மேட்டூர் அணை பல ஆண்டு காலமாக தூர் வாரப்படாமல் இருந்தது. மேட்டூர் அணையின் கொள்ளளவை அதிகரிக்க வேண்டும், பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் முழுவதும் சேமித்து வைக்க வேண்டும், உபரியாக வெளியேறும் நீரையும் சேமித்து வைக்க வேண்டும் அடிப்படையிலே 83 ஆண்டுகளுக்கு பிறகு தூர்வாரி சரித்திரம் படைத்த அரசு எங்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து கொள்ள கடமைப்பட்டு இருக்கின்றேன்.

மேட்டூர், ஓமலூர், சங்ககிரி, எடப்பாடி ஆகிய சட்டமன்ற தொகுதியிலே வாழ்கின்ற பொதுமக்கள் மற்றும் விவசாய பெருமக்கள் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுகின்ற விதமாக ஒரு மிகப் பெரிய திட்டமாக, 100 ஏரிகளில் நீர் நிரப்புகின்ற திட்டத்தை 565 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்ற இருக்கின்றோம். அப்பணிக்கு இன்னும் 5 மாதத்தில் டெண்டர் விடப்படும். ஒரே ஆண்டிலே அந்தப் பணி நிறைவு பெற்று இந்த நான்கு தொகுதியிலே இருக்கின்ற 100 ஏரிகளில் தண்ணீர் நிரப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இதன்மூலம் விவசாயத்திற்கு தேவையான நீர் கிடைக்கும். பொதுமக்களுக்கு குடிநீர் கிடைக்கும்.

காவேரி – கோதாவரி இணைப்பு திட்டம் ஒரு மிகப் பெரிய திட்டமாகும். இந்த திட்டம் நிறைவேறுகின்ற போது மேட்டூரிலிருந்து கரூர் வரை இருக்கின்ற காவேரியின்

இரண்டு கரையோர பகுதிகளிலும் நீர்ஏற்று பாசன முறையின் ஏரிகள் நிரப்பப்படும். மேலும், இந்த இரண்டு கரையோர பகுதிகளிலே இருக்கின்ற ஈரோடு, சேலம், கரூர், நாமக்கல், கோயம்புத்தூர், திருச்சி ஆகிய மாவட்ட கரையோரங்களில் இருக்கின்ற ஏரிகளும் நிரப்பப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்கள் மேட்டூரிலிருந்து உபரி நீர் திறந்து விடுகின்ற போது, மாயனூர் கதவணையிலிருந்து குண்டாறு வரை செல்வதற்கு கால்வாய் வெட்டப்படும் என்று அறிவித்தார்கள். காவேரி – கோதாவரி இணைப்பு திட்டமானது, கரூர் மாவட்டம், மாயனூர் கதவணையில் இணைக்கின்ற போது, அங்கே இருந்து வைகை, குண்டாறு வரை அந்த திட்டத்தை நீடிக்க அம்மாவின் அரசு திட்டம் தீட்டி வருகிறது. இப்பொழுது காவேரி – கோதாவரி இணைப்பு கரூரில் இணைக்கப்படுகிறது. அப்படி இணைக்கப்படுகின்ற போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எண்ணிய எண்ணத்தை இந்த அரசு நிறைவேற்றும் என்பதை பெருமையோடு இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

கரூர் மாவட்டம், மாயனூர் கதவணையிலிருந்து குண்டாறு வரை மூன்று பகுதிகளாக புதுக்கோட்டை, சிவகங்கை, வைகை மற்றும் குண்டாறு இப்படி ஒவ்வொரு பகுதியாக கால்வாய் வெட்டப்பட்டு அந்தப் பகுதி மக்களுக்கு குடிநீர் வசதியும், அப்பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு பாசன வசதியும் இந்த அரசால் செய்து கொடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

நாங்கள் சொன்னதை தான் செய்வோம், செய்வதை தாம் சொல்வோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து. நீர் மேலாண்மை மிக முக்கியம். அந்த நீர் மேலாண்மையை நாம் விவசாயிகளுக்கு சிறப்பாக செய்து தர வேண்டும். அதுதான் எங்களுடைய தலையாய நோக்கம். அதற்கு எவ்வளவு தடைகள் வந்தாலும், அத்தனை தடைகளையும் தகர்ந்தெறிந்து விவசாய பெருமக்களுடைய நலன் காக்கும் அரசாக எங்களுடைய அரசு திகழும். குடிநீர் பிரச்சனையை, தமிழகத்தில் இல்லாத அளவிற்கு நாங்கள் உருவாக்கி காட்டுவோம்.

முதலமைச்சரின் சிறப்பு குறைதீர்க்கும் முகாம் விழாவிற்கு மிக சிறப்பான ஏற்பாடுகளை செய்த மாவட்ட ஆட்சித்தலைவர் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

-----

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**